பட்டாபிராமன்

வரலாற்றுக் கற்பனை. தனிப்பார்வைக்கு.

பட்டவராயன்.

படைப்பு: ப கண்ணன்.

பாத்திரங்கள்:-

சொக்கலிங்கம்	...	பட்டர் மகன்
சோமசுந்தர தேசிகர்	....	பூசை புரியும் பட்டர்
துரைப்பாண்டியன்	...	ஜமீன்தார்
சிங்கன்	...	வேடர் தலைவன்
மூககன	...	ஒரு வேடன்
பொம்மக்கா	....	சிங்கனின் மூத்த மகள்
திம்மக்கா	....	,, இளைய மகள்
பிடாரி	....	ஒரு வேடச்சி

சிங்கி, மற்றும் சிலர்.

பொதியமலைச்சாரல். அம்பாசமுத்திரத்திற்கருகே, 6 மைல் தொலைவு. முத்தையன் கோயில் திருவிழா. ஐப்பசி மாதந்தோறும் 10 நாட்கள் மலையின்மேல் நடைபெறுகின்றது. சொரிமுத்தையன் கோயிலையடுத்துள்ள சிறு கோயில், அதுதான் பட்டவராயன் கோயில்.

கோயில் முன்பு பக்தர்கள் சூழ்ந்திருக்கின்றனர். பெருங்கூட்டம். வேடர்கள் பொங்கலிடுகின்றனர். பத்து நாட்களாகப் பாடிவந்த வில்லுப்பாட்டுக்காரர், பட்டவராயன் கதையைப் பாடிக்கொண்டிருக்கிறார்

* * * *

கதை வருமாறு:—

பொதியமலைச்சாரலில் இருக்கும் சொரி முத்தையன் கோயிலுக்கு, ஊரினின்றும் வயது சென்ற தமிழ்ப் பூசாரி சோமசுந்தர தேசிகர் தினந்தோறும் சென்று பூசை செய்து வருகிறார். அவருக்கொரு குடும்பம். ஒரு புதல்வன்—சொக்கலிங்கம் அழகன். கற்றவன். கலைநலம் பெற்றவன். தந்தையின் தொழிலை வெறுக்கிறான், நாகரிக வாழ்வை விரும்பி.

மூக்கையன் கோயிலுக்கு நிலமான்யம் கொடுத்த ஜமீன்தார் மகன் துரைப்பாண்டியன். ஜமீன்தார்! அவன் ஒரு காமுகன். சதா கேளிக்கையிலே காலம் கழிப்பவன். ஒரு தவறான காரியத்திற்கு சொக்கனின் உதவியை நாடு கிறான். அவனது அலட்சியம். அதனால் சிறு பூசல் ஏற்படு கிறது. கறுவுகிறான் பாண்டியன்.

ஒருநாள் தேசிகருக்கு உடல் நலம் குன்றவே, பூசை செய்ய மகனை மலைக்குப் போகச்சொல்கிறார். சொக்கன் மறுத்து,பின் வேண்டா வெறுப்பாகப் போகிறான்.தாயார் சமாதானம் செய்தனுப்புகிறாள்.

பொம்மக்கா, திம்மக்கா இருவரும் மலை வேடச்சிகள்; பருவக் குமரிகள்; அழகிகள். வேடர்தலைவன் சிங்க னின் மக்கள்; வீராங்கனைகள்; சுதந்திரப் பறவைகள்; புலி சிறுத்தைகளை அடித்து வீழ்த்தும் வல்லமை பெற்றவர்கள்.

தேன்,பவளம், யானை-மான் கொம்பு முதலான மலைபடு பொருள்களை விற்கும் தொழிலில் வல்ல வேடர்களின் அபி மானத்துக்குரியவர்கள் அந்த வீரிகள். தினம் பூசை வேளை யில் மூக்கையன் கோயிலுக்கு வந்து, தேசிகரிடம் பிரசா தம் பெற்றுச் சென்று உண்டு மகிழ்வது வழக்கம். அவரை "பட்டவராயரே, பட்டவராயரே" என்று அன்போடு அழைப்பர் வேடுவர்கள்.

சொக்கலிங்கம் பூசை செய்யும் வேளையில் பொம்மக்கா வும், திம்மக்காவும் வருகின்றனர் வழக்கம்போல! அவர்கள் அழகும் துணிவும் கண்டு திகைக்கிறான். அவர்கள் கேலி யும்,கிண்டலும் இவனுக்கு ஏதோ ஆசையை மூட்டுகின்றன. அவர்கள் இளம் பட்டனிடம் அன்பு காட்டுகின்றனர்.

தினந்தோறும் மலைக்குப் போக விரும்புகிறான் சொக் கன். தந்தை மகிழ்கிறார், தாயாரும் மகிழ்கிறாள் குலத் தொழிலை ஏற்றானென்று.

வேடன் மூக்கன் ஒழுக்கமற்றவன். மலைப்பொருள் விற்கும் முறையில், ஜமீன்தார் துரைப்பாண்டியனுக்கு நண்பனாகிறான்.பெண்களைமயக்க வசியமருந்து கொடுத்துப் பணம் பெறுகிறான். வேடப்பெண்களில் அழகான உருப் படிகளுக்கு அச்சாரம் வாங்குகிறான்.

சொக்கலிங்கம் பொம்மி, திம்மி இருவரையும் காதலிக் கிறான். அவர்கள் ஆசைப் புதிராக இருந்து வருகின்றனர். புரியாத இன்பம் பெறுகின்றான்.

ஒருநாள், அபிஷேகத்திற்கு நீர் மொள்ளச் சென்ற சொக்கன், ஆற்றில் தவறி விழுந்து விடுகிறான். எதிர்க் கரையிலிருந்த பொம்மி ஆற்றிலே குதித்து, அடித்துச் செல்லும் வெள்ளத்தினின்றும் அவனைக் காப்பாற்று கிறாள். பாசம்—அன்பு இறுகுகின்றது. மூக்கன் இதனைப் பார்த்து கண்டிக்கிறான். அலட்சியப் படுத்துகிறாள் பொம்மி. அவன் கறுவிச் செல்கிறான்.

சொக்கன் ஆற்று நிகழ்ச்சியைத் தந்தையிடம் சொல்ல, "பகவான் செயல்" என்கிறார் தேசிகர். சாதி, மதம், ஆச் சாரம் பற்றியும் அறிவுறுத்துகிறார். இளைஞனின் கேள்வி கள்—வாக்குவாதம், தந்தையின் புத்திமதிகள்.

மீண்டும் ஒருநாள், வனவிலங்கால் ஏற்பட்ட ஆபத்தி னின்றும் திம்மி காப்பாற்றுகிறாள் சொக்கனை. காதல் சுரக்கின்றது.

வேடர் குழுவில், பொம்மி, திம்மியின் திருமணம் பற்றிய பேச்சு. தந்தை சிங்கனின் அன்பு பொம்மக்காவும், திம்மக்காவும் ஒன்றாக இருக்கும்போது மணத்திற்கு ஒப்பு கின்றனர். தனித்தனியே தந்தையிடமும் தாயிடமும் சென்று "வேண்டாம், அவள் செய்துகொள்ளட்டும்" என்று மறுக் கின்றனர். அவர்களின் விசித்திர மனப்போக்கு பெற்றோ ருக்குப் புரியவில்லை—திகைக்கின்றனர்!

கோயில் பட்டன்—பெண்கள் தொடர்பு பற்றிக் கூறி, கட்டுப்படுத்தச் சொல்கிறான் மூக்கன். சிங்கன் தமது குல வழக்கம் கூறி, அதனை மறுக்கிறான். உரிமை வாழ்வை உயர்த்திப் பேசுகிறான். பொம்மியை மணந்து நலம் பெற எண்ணிய மூக்கன் பொருமுகிறான்!

பிடாரி, கட்டுடல் வாய்ந்தவள். மூக்கனை மணக்கும் உரி மைப் பெண்—விரும்பி நிற்பவள். அவளை மறுக்கிறான் அவன்; வெறுக்கிறான். பொம்மி—திம்மியரிடம் அவள் சொல்லுகிறாள். அவர்களது பரிகாசம்!

சோமசுந்தர தேசிகர் மகனுக்கு மணம் செய்விக்க முயலுகிறார், தாய் வற்புறுத்துகிறாள். சொக்கன் மறுத்து விடுகிறான் ஏதோ காரணம் கூறி!

வஞ்சகமாகப் பிடாரியை அழைத்துச் சென்று, துரைப் பாண்டியனின் காமத்திற்கு இறையாக விடுகிறான் மூக்கன். பிடாரி கற்பழிக்கப்படுகிறாள்; துடிக்கிறாள். அவர்கள் இருவர்க்கும் புத்தி புகட்டத் துணிகிறாள்.

மலைமீது சொக்கலிங்கம் அவர்களுக்குக் கல்வி போதிக்கிறான், கலைச்சுவையூட்டுகிறான். பிடாரி மூலம் அதனையறிந்த சிங்கனும் சிங்கியும் மகிழ்கின்றனர். பொம்மியும், திம்மியும் தனித்தனியே அவனிடம் காதலைச் சொரிகின்றனர். இருவரும் சேர்ந்துவிட்டால் பரிகசிக்கின்றனர். அவர்கள் ஒருவரையொருவர் ஏமாற்றிக்கொள்ளும் விசித்திரத்தில் மாட்டிக்கொண்டு வேதனையும், இன்பமும் அடைகிறான் சொக்கன்.

மூக்கன்—பிடாரி காதல் வேடிக்கைகள். அவள் எப்படியும் அவனை மணந்து, தன்மானம் காக்க முயலுகிறாள். மூக்கனிடம் சாகசம் புரிகிறாள். பொட்டை மோகினி பிடித்த ஜமீன்தாரை வேரோடு வெறுக்கிறாள்.

பொம்மி—திம்மியை எதிர்பாராமல் கண்டு, அவர்கள் அழகில் சொக்கி விழுகிறான் துரைப்பாண்டியன்! அவர்களையடைய விரும்புகிறான். மூக்கன் மூலம் சூழ்ச்சிகள் பல செய்கிறான். பிடாரியால் தோல்வியடைகிறான்!

சொக்கன்மேல் தாய்க்கு ஐயம். தந்தைக்கும் சந்தேகம். ஒருநாள் தேசிகரும் செல்கிறார் மலைக்கு. அன்று அந்தப் பெண்கள் வரவில்லை. பூசை முடித்துத் திரும்புகிறார் மகனோடு! மகிழ்வோடு ஆண்டவனைத் துதிக்கிறார்.

துரைப்பாண்டியன் ஆடம்பரத்தோடு, அபிஷேகம் செய்ய மலைக்கோயிலுக்குச் செல்கிறான்; பொம்மி—திம்மியைச் சந்திப்பது நோக்கம். நெருங்க முயன்று, அவர்களால் அவமானமடைகிறான். அதனைப் பார்த்துச் சிரித்துவிடுகிறான் சொக்கன். எரியும் நெருப்பிலே எண்ணெய்! அவன் மேல் ஆத்திரம் மூளுகிறது பாண்டியனுக்கு.

பாண்டியன் தேசிகரையழைத்து பையனைப்பற்றிக் கூறி, "கோயிலைக் கெடுத்தான்; மானியத்தைப் பிடுங்கி, மானத்தை வாங்குவேன். பிராயச்சித்தம் செய்!" என்று பழி வாங்குகிறான். சொக்கனுக்கு ஒரு பிராமண குரு பிராயச்சித்தம் செய்கிறார். "நிலை தாழ்ந்ததே" என்று வருந்துகிறார் தேசிகர்.

பூசைக்குச் செல்கிறார் தேசிகர். பெண்கள் சொக்கனை எதிர்பார்த்து ஏமாற்றமடைகின்றனர். ஊரில் நடந்ததை தேசிகர் கூற, அவர்கள் பரிகசிக்கின்றனர். "என் மகனைக் காப்பாற்றுங்கள்" என்று அவர்களிடம் மன்றாடுகிறார்.

அவர்கள் சாகசம் புரிகின்றனர். தேசிகர் நம்பிக்கையோடு திரும்புகிறார்.

மூக்கன் பிடாரி காதல். அவன் ஒரேயடியாக, கற்பழிந்தவள் என்று கூறி மணக்க மறுத்துவிடுகிறான். ஆத்திரங்கொண்ட பிடாரி, குலமுறைப்படி தலைவன்-சிங்கனிடம் தெரிவித்து, மூக்கனின் அம்புக்கு மாலையிட்டு, மணம் அல்லது பிணம் என்று சூளுரைக்கின்றாள்.

பூசைக்குச் செல்லும் சொக்கலிங்கம், அவர்களுக்குப் பாடலும் ஆடலும் கற்பிக்கிறான். களிக்கிறான். அவர்களும் களிப்பெய்தி தனித்தனியே அன்பும், சேர்ந்துவிட்டால் பரிகாசமும் புரிகின்றனர், தவிக்க விடுகின்றனர். இன்ப வேதனை!

மலைச் சாரலுக்கு வேட்டைக்கு வருகிறான் துரைப் பாண்டியன். வழிகாட்டி வந்த மூக்கனை, ஆட்கள் வந்து அவசரமாக சிங்கனிடம் அழைத்துச் செல்கின்றனர். எதிர்பாராமல் ஒரு புலியிடம் மாட்டிக் கொள்கிறான் துரைப் பாண்டியன். தற்செயலாக வந்த பொம்மி, புலியை வீழ்த்தி அவனைக் காப்பாற்றுகிறாள். நன்றிமறந்து, அவன் அவளை பலாத்காரம் செய்யவே, அவமானப்படுத்துகிறாள். மானமின்றி, விடமனமின்றி, மறைந்து அவளைப் பின் தொடருகிறான் துரைப்பாண்டியன்.

சொக்கனும் திம்மியும் ஆற்றோரத்தில் கூடி மகிழ்கின்றனர். பார்த்த பொம்மி, புதரில் மறைந்து கொள்கிறாள். ஜமீன்தார் ஆத்திரப்பட்டு சொக்கனை துப்பாக்கியால் சுடமுயல, அதனைக் கண்டுவிட்ட பொம்மி, அம்புவிட்டு அவன் கரத்தைத் துளைக்கிறாள். அலறிய வண்ணம் திரும்புகிறான் பாண்டியன்.

மூக்கன் பிடாரி காதல் விவகாரம். "சமூகப் பழக்கம். பெண் விரும்பி அம்புக்கு மாலை சூட்டிவிட்டால், அவன் மணந்தே தீரவேண்டும். இல்லையேல் இருவரும் போரிட்டு, யாரேனும் ஒருவர் மடிய வேண்டும்" சிங்கன் தீர்ப்புத் தருகிறான். போருக்கு அஞ்சிய மூக்கன் ஒப்புதல் தர, சம்பிரதாயப்படி மணம் நடக்கின்றது. பரிகசிக்கின்றனர் பொம்மியும், திம்மியும். திருமணக் கொண்டாட்டம்! கேளிக்கை! காட்டுக் கூத்துக்கள்!

ஊர் முக்கியஸ்தர்களைக் கூட்டிவைத்து, சொக்கனின் நடத்தை கூறி; எல்லோரையும் அழைத்துச் சென்று அந்த

அக்ரமத்தைக் காட்டுவதாகச் சொல்லுகிறான் துரைப் பாண்டியன். ஒப்புகின்றனர். தேசிகரும் ஒப்புகிறார். மலைக்குப் புறப்படுகின்றனர்.

பொம்மியும், திம்மியும் வழக்கம்போல் சொக்கனைப் பரிகசித்து, வேடிக்கை காட்டிக்கொண்டிருக்கின்றனர். அவன் காதல் தாபத்தை வெளியிட, அவர்கள் பாசாங் காகப் புறக்கணித்துப் போகின்றனர். சொக்கன் பின் தொடர, பொம்மி குறும்பாக தாம்பூலத்தை உமிழ்ந்து செல்கிறாள். காதல் வெறிகொண்டு, அதையெடுத்து வாயி லிட்டுத் தின்கிறான் சொக்கன்.

இதனைப் பார்த்திருந்த ஊர்க்கூட்டம் பதைக்கின்றது. "ஆச்சாரம் போயிற்றெ"ன்று அலறுகிறான் துரைப்பாண் டியன். "சொக்கலிங்கத்தின் மாறுகால் மாறுகை வெட்டப் படவேண்டும்" இது ஜமீன்தார் தீர்ப்பு. தேசிகர் எதிர்த்து வாதாடுகிறார்: "முருகன் வள்ளியை மணந்தான்; என் மகன் செய்தால் தவறா?" எனினும் அவர் தோற்றார்.

பொம்மக்காவும் திம்மக்காவும் ஓரிடத்தில் உட்காரு கின்றனர். பட்டவராயன் மேல் பரிதாபப்பட்டுப்பேசுகின்ற னர். ஒருத்தியை மணந்துகொள்ள மற்றொருத்தி சொல்ல— மற்றவளும் அப்படியே சொல்ல—இனி மறைத்துப் பய னில்லை, தாளமாட்டோம். இருவருமே அவனைக் காதலிக் கிறோம். இருவருமே மணக்க வேண்டுமென்று மனம் விட் டுப் பேசுகின்றனர்; முடிவு செய்கின்றனர். மூக்கன் வரு கிறான். பழிவாங்கும் முறையில் பட்டன் தண்டனை பெற்ற சேதி சொல்கிறான். பதைக்கின்றனர் குமரிகள்.

சொரிமுத்தான் பாறையிலே, ஜமீன்தார் முன்பு சொக்கன் மாறுகால் மாறுகை வாங்கப்படுகிறான். அவ னது கடைசி நேரப் பேச்சு எல்லோரையும் கலங்க வைக் கிறது. கோயிலில் கடவுளைத் துதித்தவண்ணம் மயங்கி விழுகிறார் தேசிகர்.

பொம்மியும், திம்மியும் ஓடிவருகின்றனர் பாறைக்கு. மாறுகால், மாறுகை வாங்கப்பட்டு மரண வேதனையிலிருக் கும் காதலனைக் கண்டு பதைக்கின்றனர். "நியாயமா இது?" ஊராரைக் கேட்கின்றனர். தாமறிந்த மூலிகைகளைப் பறித்து வைத்தியம் செய்கின்றனர். பலிக்கவில்லை. சிதை யில் சொக்கனோடு இருவருமே இறக்கத் துணிகின்றனர். வியக்கின்றனர் கூடியிருந்தோர். மூக்கன் அவர்கள் காதல்

வலிமை கண்டு திகைக்கிறான். புத்தறிவு பெறுகிறான். ஆபத்து நேர அழைப்பாக, கொம்பெடுத்து ஊதுகிறான்! வேடர்கள் கூடுகின்றனர். பிடாரியும் வருகிறாள். செய்தியறிந்து பதைக்கிறான்.

சிங்கன் வருகிறான். வருந்துகிறான் புதல்வியர் நிலை கண்டு. துரைப்பாண்டியனைக் கோபிக்கிறான். அதனைத் தடுத்து, தந்தைக்குத் தமது எண்ணம் கூறி, சதியாக அனுமதி பெறுகின்றனர் குமரிகள். தங்கள் மடியில் காதலனைக் கிடத்தியவண்ணம், தீயில் உடன்கட்டை ஏறுகின்றனர்! "என் மக்கள் கன்னித் தெய்வங்கள். பட்டவராயன் பகவான்" என்று சிதையை வணங்குகிறான் சிங்கன்.

தேசிகர் ஆண்டவனிடம் முறையிடுகிறார். மனங்குழைந்து பாடுகிறார். யாவும் கண்டு மருள்கிறான் ஜமீன்தார். மனம் பேதலிக்கிறது. வெருண்டு தனியே செல்கிறான். பிடாரி தொடர்ந்து சென்று தாக்குகிறாள். பழிக்குப் பழி! மலையிலிருந்து உருட்டித் தள்ளுகிறாள். மடிகின்றான் மாபாவி துரைப்பாண்டியன்.

சோமசுந்தர தேசிகர் மனம் குமுறி சோககீதமிசைக்கிறார். பட்டன்—சொக்கலிங்கம் வெட்டுண்டு மடிந்த பாறை மீது, அவர்களது சாம்பலைக் குவித்து, வேடர்களும் ஊர்மக்களும் சேர்ந்து கல் சுமந்து, மண் பிசைந்து பட்டவராயன் கோயில் எழுப்புகின்றனர்.

* * * *

வில்லுப்பாட்டின் கதை முடிகிறது. மாறுகால் மாறுகை கட்டிக்கொண்டு ஒரு பண்டாரம், பொம்மக்கா, திம்மக்கா என்ற இரு பொம்மைகளைக் கையில் ஏந்தி ஆடிய வண்ணம் தீயில் இறங்குகிறான். மக்கள்—வேடர்கள் ஆரவாரிக்கின்றனர்; வணங்குகின்றனர்; பிறகு கலைந்து செல்கின்றனர்.

———:———

குறிப்பு:- இக்கதையின் எல்லா உரிமைகளும் என்னுடையவை.
அனுமதியின்றி எவரும் இதனைக் கையாளுதல் கூடாது.

ப. கண்ணன்.
6—8—54

செந்தமிழ் அச்சுக்கூடம், சலகுண்டபுரம்.